செய்தி வெளியீடு எண்: 1070 நாள்: 03.12.2010

# ஆண்டிப்பட்டி அருகே நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்த 18 பேர் குடும்பங்களுக்கும் படுகாயமடைந்த 44 பேருக்கும் மொத்தம் 29 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் நிவாரண உதவி!

## முதலமைச்சர் கலைஞர் ஆணை!

தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி அருகே சண்முகசுந்தரபுரம் கிராமத்தில் தேனி – மதுரை மெயின் ரோட்டில் கடந்த 1.12.2010 அன்று இரவில் நேருக்குநேர் சென்ற இரண்டு தனியார் பேருந்துகள் மோதிக்கொண்டு ஏற்பட்ட விபத்தில் 2 பேருந்துகளிலும் பயணம் செய்தவர்களில் 14 பேர் சம்பவ இடத்தில் உயிரிழந்தனர். மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லும் வழியில் ஒருவரும், மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனின்றி மூவரும் ஆக 18 பேர் உயிரிழந்தனர். அவ்விபத்தில் படுகாயமடைந்த 32 பேர் தேனி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலும், 12 பேர் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையிலும் உள் நோயாளிகளாகச் சிகிச்சைபெற்று வருகின்றனர். இவர்களில் ஒருவருக்கு வலது கை துண்டிக்கப்பட்டுவிட்டது.

இந்தக் கொடுமையான விபத்து குறித்த விவரங்கள் கிடைத்ததும் மிகுந்த வேதனையும், வருத்தமும் அடைந்த முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்குத் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

மேலும், உயிரிழந்தவர்கள் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் 18 இலட்சம் ரூபாயும், ஒரு கையை இழந்தவர்க்கு 50 ஆயிரம் ரூபாயும், காயமடைந்து சிகிச்சை பெற்றுவரும் 43 பேருக்கும் தலா 25 ஆயிரம் ரூபாய் வீதம் 10 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாயும் என மொத்தம் 29 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரண உதவியாக வழங்கிட முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

***

வெளியீடு:–

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9